www.padippakam.com

7 இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் — 439 ● 1993 செப்டம்பர் 3 வெள்ளிக்கிழமை

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான
நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளை

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்
**25வது ஆண்டு நிறைவு**
**1968—1993**
கூட்டம்: செப்டம்பர் 12 பி.ப 2 மணி
**அட்டன் நகர மண்டபம்**
கண்காட்சி: காலை 10 மணிக்கு ஆரம்பம்
முடிவில் படக்காட்சி: ஸ்டார் முதல் லெனின் வரை

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்,
இளம் சோசலிஸ்டுகள்

## பீ.எல்.ஓ. - சியோனிச உடன்படிக்கை:

# முதலாளித்துவத் தேசியவாத துரோகத்தின் மைற்கல்



யசீர் அரபாத்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் சியோனிச இஸ்ரேல் அரசாங்கத்துக்கும் இடையேயான 'காசா— ஜெரிகோ' உடன்படிக்கை முதலாளித்துவத் தேசியவாதத்தின் மற்றுமொர் மாபெரும் துரோக நடவடிக்கையாக வரலாற்றில் இடம்பெறும். நோர்வேயில் இடம்பெற்ற இரகசியக் கூட்டங்களின் பின்னர் தயார் செய்யப்பட்ட இந்த உடன்படிக்கையின் படி 'சுயாதீன' பாலஸ்தீனத்தினை சியோனிச ஆட்சியாளர்கள் நிர்மாணிப்பார்கள், காஸா முனையையும் மேற்கு கரை நகரமான ஜெரிகோவினையும் உள்ளடக்கிய இந்த குட்டி அரசினை இஸ்ரேலியக் கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்க நிறுவப்படும் ஒரு ஆட்சிச்சபையில் பீ. எல ஓ. பங்கு கொள்ளும்.

குட்டி அரசு என்ற பதம் கூட பொருளாதார ரீதியில் தாக்கிப் பிடிக்க முடியாத இந்த வரலாற்றுக் கருச்சிதைவினை வருணிக்கப் போதியதல்ல. இந்தக் குட்டி பிராந்தியம் அமெரிக்காவினால் நிதியீட்டம் செய்யப்படும் இஸ்ரேலியப் பொருளாதாரத்திலேயே தங்கியிருக்கும். 'சுயாதீன' அரசை அமைக்க ஆதரவு தேடுவதாககூறிச் செப்டம்பர் முதல் வாரத்தில் பீ. எல். ஓ. தலைவர் மேற்கொண்ட உலகச் சுற்றுலா, மேற்கத்தைய முதலாளித்துவஆட்சியாளர்கள், சவூதி அரேபிய மன்னர் குடும்பம், மற்றும் அராபிய முதலாளித்துவ அரசுகளிடம் பிச்சை கேட்கும் விஜயமாகவே அமைந்தது.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பிராந்தியங்களில் வாழும் 1'8 மில்லியன் பாலஸ்தீனர்களை நெறிப்படுத்தும் ஒரு பொலிஸ்படை பதவியை பீ,எல்.ஓ. சியோனிச அரசிடம் இருந்து பொறுப்பேற்றுள்ளது. ஜெரிகோ தவிர்ந்த மேற்குக் கரையின் ஏனைய பகுதிகளில் இஸ்ரேல் ஆட்சி தொடரும். இந்த உடன்படிக்கை குறிப்பிடும் ஐந்து ஆண்டு காலப் 'பரீட்சார்த்த காலத்தில்' ஒரு பாலஸ்தீன ஆட்சி சபைக்கு சுகாதாரம், கல்வி, சேமநலன், உல்லாசப் பயணம், கலாச்சாரம் பற்றிய பொறுப்புக்கள் வழங்கப்படும்.

இந்தத் திட்டம் உண்மையில் சியோனிச ஆட்சியாளர்கள் கோரிய அனைத்தையும் கொடுத்துள்ளது. இது தென்னாபிரிக்க கறுப்பு இனத்தவர்கள் மேல் இனவொதுக்கல் ஆட்சியாளர்கள் திணித்த பண்டுஸ்டான் முறையைபெரிதும் ஒத்துள்ளது.

ஜெரிகோ கிட்டத்தட்ட 10,000 சனத் தொகையை கொண்டுள்ளது. பீ எல்.ஓ. அதிகாரிகள் முதலில் ஜெரிசோவுக்கு விஜயம் செய்ததற்கும் அதை மேற்குக் கரையில் தெரிந்தெடுத்ததற்கும் காரணம் என்ன? மேற்குக் கரையின் ஏனைய நிலையங்களில் பீ.எல்.ஓ. செல்வாக்கிழந்து போயுள்ளதே காரணம். ஜூலை 25ம் திகதி இஸ்ரேலிய அரசாங்கம் தென் லெபனானில் ஒரு பயங்கரத் தாக்குதலை நடாத்தியது. இப்பிரதேசத்தில் வாழும் மக்களை அடியோடு விரட்டியடிப்பதற்காகவே இத்தாக்குதல் இடம்பெற்றது. இந் நிலையிலேயே முதலாளித்துவ தேசியவாதத் தலைவரான யசீர் அரபாத் அமெரிக்க ஆட்சியாளர்களால் வாஷிங்டனில் ஏற்பாடு செய்யப்பட்ட மத்திய கிழக்குப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார்.

பீ.எல் ஓ தலைமை ஏகாதிபத்தியத்தின் நெருக்குவாரத்துக்கும் ஸ்டாலினிசத்தினதும் அரபு முதலாளி வர்க்கத்தினதும் துரோகங்களுக்கும் அடிபணிந்து, அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் சரணடைந்துள்ளது. 1988ல் பீ எல்.ஓ. இஸ்ரேல் அரசினை அங்கீகரிப்பதன் அடிப்படையில் வாசிங்டன் பேச்சுவார்த்தைகளை

(14ம் பக்கம் பார்க்க)

# தமிழ் அகதிகள் கொழும்பில் இருந்து..

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசம் பொதுவில் மனித சஞ்சாரம் அரிதான பிராந்தியமாகும். அவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கமும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் பிரச்சாரம் செய்துகொள்ளும கொட்டில்கள், நிலத்துக்குச் சீமெந்து தளமும் இடப்படாதவை.

இந்த அகதிகள் நிவாரண வெட்டு நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வெளியே வசித்து வந்த அகதிகளை மட்டுமன்றி இந்த மாவட்டத்துக்குள்ளேயே இடம்பெயர்ந்து இருந்தவர்களையும் பாதித்துள்ளது. பனங்காட்டு அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த மக்களை கண்ணகி புரத்தில் 'குடியமர்த்தும்' வேலைகள் இடம்பெறுகின்றன. இதன்படி கண்ணகி புரத்தில் 447 குடும்பங்களை சேர்ந்த 1812 பேரும் குடியமர்த்தப் படுகின்றனர். யூஎன்பி அரசாங்கத்தின் மீளக் குடியமர்த்தல் திட்டத்தின் மோசடியை நிரப்பும் வகையில் ஜேர்மன் ஏகாதிபத்திய அரசாங்கமும் இதில் கைபோட்டுக் கொண்டுள்ளது. இலங்கையில் உள்ள ஜேர்மன் தலைவர் கலாநிதி குலோபல் இத்திட்டத்தினை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். சமீபத்தில் ஜேர்மன் அரசாங்கம் அரசியல் அகதிகள் சம்பந்தமான சரத்துக்களை இறுக்கமாக்கியதைத் தொடர்ந்து அகதிகளை நாடுகடத்த எடுத்து வரும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகவே இத் தலையீடுகள் இடம்பெறுகின்றன.

இந்த அகதிகள் குரல்வளை நெரிப்புத் திட்டத்தில் தமிழ் நாடு அதிமுக ஜெயலலிதா அரசாங்கமும் சேர்ந்து கொண்டுள்ளது. இந்தியாவில் எஞ்சியுள்ள சுமார் 80000 அகதிகளை திருப்பி அனுப்ப காங்கிரஸ் மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து மாநில அரசாங்கள் செயற்பட்டு வருகின்றன. அனாதைகளுடன் சேர்ந்து இந்தியாவினுள் ஊடுருவிக் கொண்ட முதலாளித்துவ எஸ். சி. சந்திரகாசன் போன்றவர்கள், நிலைமையை சாதகமாக்கிக்கொள்ளும்பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் இருப்பதா அல்லது இலங்கைக்குப் போவதா என்ற தெரிவுப் பிரச்சினை பற்றி சந்திரகாசன் குறிப்பிடுகையில் ''இந்தியாவில் இருந்தால் போஷாக்கின்மையால் இறக்க நேரிடும் இலங்கைக்குப் போனால் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகநேரிடும்'' என்றுள்ளார்.

விடுதலைப் புலிகளும் மற்றும் முதலாளித்துவ தேசியலாத இயக்கங்களும் இந்த அகதிகள் பிரச்சினையை தமது ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ நலன்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளத் துடிக்கின்றனர். தமிழ் மக்களின் 'மனித உரிமைகள்' காக்கும் பேரில் ஏகாதிபத்திய இராணுவ தலையீட்டுக்கு அழைப்பு விடுப்பதில் தமிழ் முதலாளிகள் இறங்கியுள்ளனர். இதை த. வி, கூ. தலைவர். எம். சிவசிதம்பரத்தின் ''மேற்கத்தைய நாடுகள் வரலாம். அவர்கள் இந்தியாவுடன் சேர்ந்து வரவேண்டும். ... அப்போதுதான் எமக்கு விமோசனம்'' என்ற கூற்றுத் தெளிவு படுத்துகின்றது.

இனவாத யுத்தத்தை நிறுத்து! வடக்குக் கிழக்கில் இருந்து ஆயுதப் படைகளை வெளியேற்று! தமிழீழம்— இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்தினை நிறுவு என்ற வேலைத்திட்டத்தினை முன் வைத்துப் போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே முதலாளித்துவ ஆட்சியை முடிவு கட்டுவதன் மூலம் இந்த இனவாத வேட்டைக்கு முடிவு கட்டப் போராடுகின்றது.

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

படிப்பகம்

www.padippakam.com



# ''இவ்விசாரணை பிரேமலால் ஜயக்கொடியினது மரணத்தினதும், சு. வ. வ. உண்மை நிலையை அம்பலப்படுத்தும்''-கமிட்டி தலைவி விலானி பீரிஸ்




''அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த சுயாதீன தொழிலாளர் விசாரணைக் குழுவை நிறுவ அழைப்பு விடுத்ததற்குக் காரணம், கொரியா—சிலோன் பாதணி கம்பனியில் சேவை செய்த பிரேமலால் ஜயக்கொடியின் மரணம் தொடர்பான உண்மைத் தகவல்களை அரசியல் கட்சிகளும், வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் மூடி மறைத்துக் கொண்டுள்ளதே'' என இந்த சு.தொ.வி. கமிட்டியின் தலைவி விலானி பீரிஸ் குறிப்பிட்டார்.

ஜூலை 25ம் திகதி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் கொழும்பு அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் நடாத்தப்பெற்ற இந்த விசாரணைக் கமிட்டியின் ஆரம்பக் கூட்டத்தில் பேசுகையிலேயே புகக மத்திய குழு உறுப்பினரும், சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டியின் தலைவியுமான விலானி பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


இக்கூட்டத்திற்கு பிரேமலால் ஜயக்கொடியின் மனைவியான கல்யாணி ஜயக்கொடி, உறவினர்கள், சு.வ, வ. தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள், மத்திய வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், நாதிகள், பொறியியலாளர், இரசாயன நிபுணர்கள். இளைஞர்கள் ஆகியோர் வருகை தந்திருந்தனர். பிரேமலால் ஜயக்கொடியை நினைவு கூறும் பொருட்டு ஒரு நிமிடம் மௌனம் அனுஷ்டிப்பதுடன் ஆரம்பமான இக்கூட்டத்தில் பேசுகையில் விலானி பீரிஸ் மேலும் குறிப்பிட்டதாவது:

''பழுதடைந்து கிடந்த இயந்திரத்தில் பலாத்காரமான முறையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதன் மூலம் பிரேமலாலின் இம் மரணம் இடம்பெற்றுள்ளது. இதனால் இலாபவெறியால் உயிர்களைப்பற்றி கணக்கெடுக்காது செயல்படும் பன்னாட்டு கம்பனிகள் உண்டுபண்ணும் பேரழிவு வெளிப்பட்டுள்ளது. இந்த சு. தொ. வி. கமிட்டி பிரேமலாலின் மரணத்தையும், அதைச் சூழவுள்ள சகல நிலைமைகளையும் அம்பலப்படுத்தும். அவ்வாறே சு. வ.வ. தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் நிஜ நிலைமைகளையும் அம்பலப்படுத்தும்.'' என்றார்.

பிரேம்லால் ஜயக்கொடியின் மனைவி விசாரணைக் கமிட்டியின் ஆரம்பக் கூட்டத்துக்கு வருகை தந்ததையிட்டு நன்றி தெரிவித்த விலானி, அங்கு வருகை தந்த சு.வ,வ, ஏனைய தொழிலாளர்களுக்கும் நன்றி கூறினார். பக்டரிகளை மூடியும் தொழில்களை நாசமாக்கியும் வேலையைத் துரிதப்படுத்தியும், மூர்க்கமான சேவை நிலைமைகளின் கீழ் சு.வ.வ. பன்னாட்டுக் கம்பனிகள் தொழிலாளர்களை சுரண்டும் முறையை அவர் கூட்டத்தினருக்கு விளக்கினார்.

''தாய்வான் பன்னாட்டுக் கம்பனிக்குச் சொந்தமான கட்டுநாயக்க ரீ, கே. பாஸ்டனர், அதனுடன் இணைந்த ரீ. கே பிரெஸ்சன் இன்டஸ்ரியல் கம்பனிகளை இழுத்து மூடிய முதலீட்டாளர்கள், அரசாங்கத்துக்கும் கூட அறிவிக்காமல் நாட்டில் இருந்து வெளியேறி உள்ளனர். அனைத்துலக ரீதியில் இயங்கி வரும் இந்த பன்னாட்டுக் கம்பனிகள் உலகளாவிய ரீதியில் வளர்ச்சி கண்டுள்ள உலக உழைப்பு பகுப்பு நிலைமையினுள் செயற்படும் விதம் இதன் மூலம் தெளிவாகின்றது.

(14ம் பக்கம் பார்க்கவும்)



ஆரம்பக் கூடடத்தில் பிரேம்லால் ஜயக்கொடியின் மனைவி கல்யாணி பேசுகின்றார்.

## இந்திய ட்ரொட்ஸ்கிச சோசலிச தொழிலாளர் கழகம் ஆதரவு



நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட

சோசலிசத் தொழிலாளர் கழகம்

37, 2வது மாடி,
நாராயண் மஸ்திரி வீதி,
ஒட்டேரி சென்னை.
1993 ஜூலை 24

விலானி பீரிஸ்,
தலைவி,
சுயாதீனத் தொழிலாளர் விசாரணைக் குழு,
90. 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு—10, இலங்கை.

அன்பின் தோழி,

பிரேமலால் ஜயக்கொடியின் மரணம் பற்றியும் சுதந்திர வர்த்தக வலயத்தின் சேவை நிலைமைகள் பற்றியும் ஆராயும் தொழிலாளர் விசாரணைக் குழு 1993 ஜூலை 25ம் திகதி கூடுவதாக பு.க.க. பொதுச் செயலாளர் தோழர். விஜே டயசிடம் அறிந்தோம்.

துக்கத்தில் ஆழ்ந்த ஜயக்கொடியின் குடும்பத்தினருக்கும், தாம் சேவை செய்து வந்த 5 தொன் எடை கொண்ட நெரிக்கும் இயந்திரத்தினுள் நசுங்குண்டு ஜயக்கொடி இறந்து போகும் வரை அவருடன் ஒன்றாகச் சேவை செய்த கொரியா—சிலோன் பாதணி கம்பனியின் தொழிலாளர்களுக்கும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட இந்திய ட்ரொட்ஸ்கிச சோசலிசத் தொழிலாளர் கழகம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றது. உங்களின் விசாரணைக் கமிட்டிக்கு ஆதரவு தர சோசலிசத் தொழிலாளர் கழகம், இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் உள்ளே பிரச்சார இயக்கத்தினைத் தொடுக்க உறுதி பூண்கிறது,

தோழமையுடன்

அருண் குமார்
பொதுச் செயலாளர்,
சோசலிசத் தொழிலாளர் கழகம்

## 'கமிட்டி அமைக்கப்பட்டதற்கு நன்றி கூறுகின்றேன்'

### பிரேமலால் ஜயக்கொடியின் மனைவி

''பிரேமலால் ஜயக்கொடியின் மரணத்தைப் பற்றி ஆராய இக் கமிட்டி நிறுவப்பட்டதையிட்டும், எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்ததையிட்டும் நான் கமிட்டிக்கு நன்றி கூறுகின்றேன்.'' புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் நிறுவப்பட்டுள்ள சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டியின் ஆரம்பக் கூடடத்தில பேசிய காலஞ்சென்ற தொழிலாளி பிரேமலால் ஜயக்கொடியின் மனைவி கல்யாணி குமாரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''பிரேமலால் தனக்குரிய இயந்திரத்தினை விட வேறு எந்த இயந்திரத்திலும் வேலை செய்வதை என்றுமே விரும்பியதில்லை. இதை நான் நன்கு அறிவேன். அவர் இந்த இயந்திரத்தில் வேலை செய்ய நெருக்கப்பட்டுள்ளார், பிரேமலாலின் கை இயந்திரத்தினுள் அகப்பட்டு விட்டதாகக் கூறியே எம்மை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றார்கள். நாம் சவக்காலையிலேயே அவர் இறந்துவிட்டதை அறிந்தோம், பிரேமலால் இறந்துவிட்டதாக அறிந்ததுதான் தாமதம் நான் அந்த இயந்திரத்தினைப் பார்க்க வேண்டும் என நெருக்கினேன், உள்ளே போய் பார்த்ததும் அந்த இயந்திரம் அவர் வேலை செய்தது அல்ல என்பது தெரிந்தது. இயந்திரம் கழற்றப்பட்டு, சங்கிலிகளில் தொங்குவதுபோல் காணப்பட்டது.... ஒரு கிழமைக்கு முன்னர் இயந்திரம் திருத்துவதற்கெனக் கழற்றப்பட்டுள்ளது.

''சம்பவம் இரவு 7/15 க்கு இடம்பெற்றுள்ளது. (தொழிலாளர்கள்) பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். நிர்வாகம் அதை நிறுத்தும்படியும் 5 இலட்சம் நஷ்டஈடு தருவதாகவும் கூறியது.''

''இயந்திரம் பழுதடைந்து போய்கிடந்தது என்பதை நிர்வாகம் ஒப்புக் கொண்டதா? என தலைவி விலானி பீரிஸ் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் கல்யாணி குமாரி பின்வருமாறு தெரிவித்தார்;

''ஆம். இயந்திரத்தின் பிழையினால் இது நடைபெற்றுள்ளது என பகடரி பிரதம முகாமையாளர் திரு. மன்னக்கார கூறினார். இயந்திரத்துக்குப் பொருத்தக் கொணரப்பட்ட உதிரிப்பாகங்கள் விமான நிலையத்தில் இருப்பதாகவும், தவறு தமதே எனவும் முகாமையாளர் கூறினார்,''

பிரேமலாலின் பிரேதம் வெட்டிப் பரீட்சிக்கப் பட்டதா என விசாரணக் கமிட்டி

(45ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# உலக நெருக்கடி உக்கிரம்: தனியொரு ஐரோப்பிய சந்தை நிறுவும் திட்டம் தவிடுபொடி

ஆகஸ்ட் முதல் வாரத்தில் ஐரோப்பியச் சந்தையில் நாணய அலகுகளிடையே ஏற்பட்ட கொந்தளிப்பு நிலையானது தனியொரு ஐரோப்பிய சந்தையை நிறுவும் ஐரோப்பிய வல்லரசுகளின் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஐரோப்பிய நாணய அமைப்பைச் சிதறுண்டு போகச் செய்துள்ளது. இது உலகப் பொருளாதார நெருக்கடியின் புதியதோர் கட்டத்தினைக் குறித்து நிற்கின்றது.

கடந்த 12 மாதங்களுக்கு மேலாக ஐரோப்பிய நாணய சங்கத் (EMU) தின் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட செலாவணி வீத பொறிமுறை (ERM)யைக் காக்கப் பிரான்சிய, ஜேர்மன் மத்திய வங்கிகள் எடுத்த பகிரதப்பிரயத்தனங்களுக்கு மத்தியிலும் இது சிதறுண்டு போயுள்ளது. ஓராண்டுக்கு முன்னர் (1992 செப்டம்பர் 15) 'கறுப்பு புதன்கிழமை'யில் செலாவணி வீத பொறிமுறையில் இருந்து பிரித்தானிய பவுணும் இத்தாலியன் லீறாவும் பலாத்காரமாக வாபஸ் பெறப்பட்டமைக்கு பிரான்சிய, ஜேர்மன் அரசாங்கங்களுடன் துணிச்சலுடன் முகம் கொடுக்க முயன்றன. ஆனால் இன்று 1930ன் மாபெரும் பொருளாதார மந்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள ஆழமான பொருளாதார வீழ்ச்சியானது ஐரோப்பிய முதலாளித்துவ வல்லரசுகளிடையேயான மோதுதல்களை உச்சக் கட்டத்துக்குக் கொணர்ந்துள்ளது. இது அவர்களின் தனியொரு ஐரோப்பியச் சந்தைத் திட்டத்துக்கு மரண அடி கொடுத்துள்ளது.



கெல்மட் கோல்

ஜேர்மன் மத்திய வங்கியான—புண்ட்ஸ்பாங்க் அதன் முக்கிய கழிவு வட்டி வீதத்தினைக் குறைக்க, மறுத்ததைத் தொடர்ந்து ஐரோப்பியச் செலாவணி வீத பொறிமுறையைக் காக்க ஐரோப்பிய அரசாங்கங்களும் மத்திய வங்கிகளும் எடுத்த சகல முயற்சிகளும், பிரான்சிய பிராங் மற்றும் பலவீனமான ஐரோப்பிய நாணயங்கள் தொடர்பாக ஏற்பட்ட பிரமாண்டமான ஊகங்களால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. ஜூலை கடைசி வாரத்தில் மட்டும் பிரான்சிய, ஜேர்மன் மத்திய வங்கிகள் ஜேர்மன் டியூச் மார்க்கிற்கு எதிரான இவற்றின் வீழ்ச்சியைத் தடுக்க 100 பில்லியன் டாலர்களுக்கு பிராங்கினையும் மற்றும் நாணயங்களையும் கொள்முதல் செய்துள்ளன. உலகளாவிய நிதிச் சந்தையில் தினசரி 1470 பில்லியன் டாலர்களுக்கும் கூடுதலாக நாணயக கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதால் இந்த நடவடிக்கை பயனளிக்காது போயிற்று.



ஜோன மேஜர்

இந்த உலாஞ்சல்களை ஐரோப்பிய அரசாங்கங்களால் தடுக்க முடியாது போனமையானது பொருளாதார வாழ்க்கையை ஒழுங்கு செய்யவும் 'உஜாருட்டவும்' அரசாங்கங்களால் முடிந்த நீண்ட யுத்தத்துக்குப் பின்னையகாலப்பகுதி முற்றுப்பெற்று விட்டதைக் காட்டுகின்றது. இன்று ஒரு புதிய காலப் பகுதி தோன்றியுள்ளது. இதில் முதலாளித்துவ இலாப அமைப்பின் புறநிலை முரண்பாடுகள் தினசரி வாழ்வில் வெடித்துச் சிதறிக் கொண்டுள்ளது. இது முதலாளித்துவச் சக்திகளை நாணய முறையுடனோ அல்லது வர்த்தகக் கொள்கைகளுடனோ எதுவிதத்திலும் ஒருங்கிணைக்க முடியாமல் செய்துள்ளது.

1979ல் இருந்து ஐரோப்பிய நாணயங்களின் பெறுமதியை ஒழுங்குபடுத்தி வந்த இந்த செலாவணி வீத பொறிமுறையைக் காப்பாற்ற ஐரோப்பியப் பொருளாதாரச்சமூகத்தின் நிதி அமைச்சர்கள் நடாத்திய அவசரகால கூட்டத்தினாலும் இதைத் தடுக்க முடியாது போயிற்று. இதற்கிடையே உலக நிதிச் சந்தைகள் அமெரிக்கடாலருக்குஎதிரான தாக்குதலைத் தொடுத்தன. யப்பானிய யென்னுக்கு எதிரான டாலரின் பெறுமானம் வீழ்ச்சி காணச் செய்யப்பட்டது, யெனின் பெறுமானத்தைக் கூட்டும் இந்நடவடிக்கைகள் யப்பானின் நீண்டகால பொருளாதார வீழ்ச்சியை ஆழமாக்குவதோடு சந்தைகளுக்கான உலகளாவிய போராட்டத்தினை மேலும் மோசமாக்கும்.

## மோசடிப் பிரச்சாரம்

1993ம் ஆண்டின் உதயத்தோடு அபிவிருத்திக்கும், செழிப்புக்குமான ஒரு புதிய யுகம் பிறப்பதாக ஐரோப்பிய முதலாளி வர்க்கம் கொண்டாடியது. இத்தனையும் தனியொரு கண்டரீதியான கண்ணோட்டத்திலேயே இடம்பெற்றது. ஆனால் இன்று நடைபெறு இருப்பதோ இதற்கு மாறாக 60ஆண்டுகள் ஐரோப்பா கண்டிராத மோசமான பொருளாதார வீழ்ச்சியினுள் அது தலைமூழ்கிப் போயுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம்—இந்த 12 அங்கத்தவர்களைக் கொண்ட ஐரோப்பிய சமூகத்தில் — 17 மில்லியன்களையும் தாண்டியுள்ளது. (இலங்கையின் முழுச் சனத் தொகை எண்ணிக்கை) இவ்வாண்டின் இறுதியில் இது மேலும் 20 மில்லியன்களாக அதிகரிக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பிரான்சில் வேலையற்றோர் எண்ணிக்கை ஏற்கனவே 30 இலட்சத்தையும் தாண்டியுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

# ட்ரொட்ஸ்கிசத்தின் பேரில் உயிர்நீத்த தோழர். பியதாச

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக தம்புத்தேகம அமைப்பாளர் தோழர். ஆர். பி. பியதாச யூஎன்பி கொலைகாரர்களால் கண்டதுண்டமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டு 14 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்த (1976) சொற்ப காலத்தினுள் அவர் பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்துக்கான போராட்டத்தின் உறுதியான போராளியாக விளங்கினார்.

தம்புத்தேகமப் பகுதியில் யூ என்.பி —பொலிஸ் ஒடுக்குமுறைகளின் ஒரு பாகமாக இடம்பெற்ற கற்பழிப்புச் சம்பவத்துக்கு எதிராக தோழர்.பியதாச மற்றும் இளைஞர்களுடன் சேர்ந்து ஊர்வலமொன்றை ஏற்பாடு செய்தமைக்காக 1976 ஜூலையில் பொலிசாரால் ரிமான்டில் தள்ளப்பட்டார். சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சி துரோகிகளின் காட்டிக்கொடுப்பினால் 1977ல்ஆட்சிக்கு வந்த யூஎன்பி அரசாங்கம், இப் பிரதேச விவசாயிகளுக்கு எதிராக ஒரு தொகை தாக்குதல்களைக் கட்டவிழ்த்தது.மகாவலி நிலங்களில் இருந்து விவசாயிகளை வெளியேற்றுதல், மானியங்கள் வெட்டு ஆதியன உக்கிரம் கண்டன. இக்காலப்பகுதியில் தொழிலாளர்களையும் ஏழை விவசாயிகளையும் அடக்கி ஒடுக்குவதற்கான ஆயுதமாக ஜயவர்தனா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதப் பயங்கரத்தினைப் பாவித்தது.



தோழர். ஆர்.பி.பியதாச

1979ல் நடைமுறைக்கு வந்த பயங்கரவாதச் சட்டத்தினை எதிர்த்து நகர்ப்புற தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் பணியை சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சித் துரோகிகள் அடியோடு கைவிட்டிருந்த நிலையிலும் பின்தங்கிய ஒரு விவசாயக் கிராமத்தில் இதற்கு எதிரான பிரச்சார இயக்கத்தில் தோழர். பியதாச முன்னணியில் நின்றார். யூஎன்பி -அரச ஒடுக்குமுறைக்கு மத்தியிலும் ட்ரொட்ஸ்கிச அனைத்துலகவாத அடிப்படைக் கொள்கைகள், வேலைத்திட்டத்தின் பேரில் தோழர். பியதாச போராடினார்.

தோழர். பியதாச கொலை செய்யப்படுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இயக்கமான வேர்க்கஸ் லீக்கின் அரசியல் குழு உறுப்பினர் ரொம் ஹெனகன் கொலை செய்யப்பட்டதும், அங்கத்தவர் ஜக்ஸ் விலோட்டும் ஒகஸ்டஸ் விலோட்டும் கொலைகாரரின் தாக்குதலுக்கு உள்ளானதும் குறிப்பிடத் தக்கது. அந்த விதத்தில் தோழர். பியதாசவுக்கு எதிரான கொலைத் தாக்குதல் ஒரு தனிப்பட்ட, தேசிய நிகழ்வு அல்ல. தம்புத்தேகம பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் நெருங்கிய உறவுகள் கொண்டிருந்த நவ சமசமாஜ கட்சி அங்கத்தவர்கள், பியதாசவின் கொலையை அரசியல் கொலை அல்லவெனக் காட்ட சகல வகையிலும் முயன்றனர். 10 ஆண்டுகளுக்கு மேலாக முதலாளித்துவ அரசு இக்கொலை வழக்கு விசாரணையைத் தள்ளிப் போட்டு வந்தது. இறுதியில் கொலையாளிகள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு, ஏழு ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டனர்.எனினும் நான்கு எதிரிகளில் பல்லேபிட்டிய என்ற கொலையாளி மட்டுமே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டான். ஏனையவர்கள் இன்னமும் தலைமறைவாக உள்ளதோடு இடைக்கிடையே இக்கிராமத்துக்கு வந்து போகிறார்கள். இருப்பினும் இவர்கள் சுதந்திரமாக உலாவப் பொலிசார் இடமளித்துள்ளனர்.

தோழர், பியதாச கொலையின் உண்மை நிலையை அம்பலப்படுத்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொடுத்த சுயாதீன தொழிலாளர் விசாரணைக்கு சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இதொகா. தலைவர்கள் ஆதரவளிக்க மறுத்தனர், இவர்கள் இந்த அரச சார்பு நிலைப்பாட்டினை உச்சக் கட்டத்துக்கு எடுத்துச் சென்றதோடு 1988—90ல் அரச—ஜேவிபி. பாசிச தாக்குதல்கள் உச்சக் கட்டத்தினை அடைந்த நிலையில் முழுமனே ஸ்தம்பித்துப் போனதோடு அரசிடமும் சரணாகதி அடைந்தனர்.

★ தோழர் பியதாசவின் நினைவு நீடூழி வாழ்க!


## தொழிலாளர் பாதை
### சந்தாதாரர் ஆகுங்கள்

அஞ்சல் கட்டணம் உட்பட ''தொழிலாளர் பாதை''
சந்தா விபரம்

1 மாதம் — ரூபா 8/- 3 மாதம் — ரூபா 24/-
6 மாதம் — ரூபா 48/- 1 வருடம் — ரூபா 96/-

பெயர்: ..............................................

முகவரி: ..............................................

சந்தாக் காலம்: ......... ரூபா......... சதம்.........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:- ''தொழிலாளர் பாதை''
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-1.0


படிப்பகம்

www.padippakam.com



# அடிப்படைக் கொள்கைகளுக்கும், மூலோபா

## பு. க. க. பொதுச் செயலாளர் விஜே டயஸ், 25 ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் நிகழ்த்திய உரை



ஆண்டு நிறைவுக கூட்டத்தில் உரை நிகழ்த்தும் தோழர். விஜே டயஸ்

**தோழர்களே,**

**தோழியர்களே, நண்பர்களே**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இந்த 25வது ஆண்டு நிறைவுக் கூட்டம், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை கட்டி எழுப்பும் போராட்டத்தில் பல்வேறு விதத்திலும் பங்கு கொண்ட அனைவரும் பெருமைப்படக் கூடிய ஒரு தருணமாகும் என முதலில் குறிப்பிட விரும்புகின்றேன்.

பு.க.க.வை கட்டியெழுப்பும் போராட்டம், 25 ஆண்டுகள் பூராவும் மார்க்சிசப் புரட்சிகர அடிப்படைக் கொள்கைகளையும் உலக சோசலிசத்தின் மூலோபாயத்தினையும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களிடையே நிலைநாட்டத் தொடுத்த போராட்டமாகும். ஆரம்பத்தில் இருந்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அந்தத் தொழிலாள வர்க்க அனைத்துலகவாத அடிப்படையில் காலூன்றாமல் தொழிலாள வர்க்கத் தலைமை நெருக்கடியை தீர்த்து வைக்கும் ஒரு கட்சியைக் கட்டியெழுப்ப முடியாது என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தது.

சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தினைப் பிரதிநிதித்துவம் செய்து, அதன் ஜேர்மன் கிளையின் செயலாளர் தோழர். உலி றிப்பேர்டும், எமது தோழமை இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் தோழர்களான அருண்குமார், ராம் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதன் மூலம் அப்போராட்டத்தின் அடிப்படைத் தன்மை ருசுவாகியுள்ளது. அவ்வாறே இலங்கைப் பிற்போக்கு அரச படைகளதும், வடக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் மற்றும் அரச சார்பு ஆயுதம் தாங்கிய தமிழ் கும்பல்களதும் கெடுபிடிகளுக்கு மத்தியில் ஆறு நாட்கள் பயணம் செய்து பு. க. க. தமிழ் அங்கத்தவர்கள் இங்கு வருகை தந்துள்ளமையும் அப்போராட்டத்துக்கு ஒரு கெளரவமாகும்.

இந்த விதத்தில் 25 ஆண்டுக் கால மார்க்சிசத்துக்கான உறுதியான போராட்டத்தினைக் கொண்டாடக் கூடிய வேறு ஏதும் அமைப்பு எமது அக்கம் பக்கத்தில் உள்ளதா? அவைகள் 25 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலான காலம் இருந்து வந்துள்ள போதிலும் அவர்களால் நீண்ட அடிப்படைக் கொள்கைப் பிடிப்பும் மூலோபாயமும் கொண்ட போராட்டத்தினைக் கொண்டாட முடியுமா? ஓணானைப் போல் இடத்துக்கிடமும், நேரத்துக்கு நேரமும் சந்தர்ப்பவாத ரீதியில் நிறங்களை மாற்றி, தொழிலாள வர்க்க அனைத்துலகவாத புரட்சிகரக் கொள்கைகளைக் காட்டிக் கொடுத்தவர்கள் இன்று தமது இயக்கத்தின் வரலாற்றைப் பற்றி வாய்திறக்கவும் அஞ்சுகின்றனர். இதன் காரணமாகவே லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்கள் இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் தாம் சேர்ந்திருந்த போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சியைப் பற்றி அத் தலைவர்களின் மரண அறிவித்தலில் — அறிக்கையில் கூடக் குறிப்பிட அஞ்சுகின்றனர்.

25 ஆண்டுகளுக்கு முன்னர் அரசியலுக்கு வந்த மற்றுமோர் கட்சியின் தலைவிதியையும் ஆராய்ந்து பார்த்தல் உசிதமானது. 1968ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியல் விதிமுறையின் அடிப்படையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஸ்தாபிக்கப்பட்ட வேளையில் 1964ன் மாபெரும் காட்டிக் கொடுப்புக்கு எதிர்ப்புக் காட்டிய ஒரே கட்சி அதுவல்ல. இன்னும் பல கட்சிகள் இருந்தன. புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சி (ல.ச.ச.க.(பு)) அதில் ஒன்றாகும்.

ல. ச. ச. க. (பு) கட்சியின் இருப்புக்கு என்ன நடந்தது? 1964 காட்டிக் கொடுப்பினை நோக்கி சமசமாஜக் கட்சியைக் கொண்டு சென்ற அரசியல் விதிமுறைகளின் மூலங்களை ஆய்வு செய்வதை அடியோடு நிராகரித்த ல.ச.ச.க.(பு) தலைவர்கள், சமசமாஜக் கட்சியை துரோகப் பாதையில் இட்டுச் சென்ற பப்லோ—மண்டேல் இயக்கத்திலேயே சேர்ந்து கொள்ளத் தீர்மானம் செய்தனர். இத்தகைய அரசியல் தவறுகளுக்கு வரலாறு எவ்வளவு பாரதூரமான நஷ்டஈடு கொடுக்க நேரிட்டது என்பதற்கு ல.ச.ச.க.(பு) நல்ல உதாரணம்.

அதன் ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவரான வீ. காராலிங்கம், திரும்பவும் லங்கா சமசமாஜக் கட்சியில் சேர்ந்து, கூட்டரசாங்க அரசியலில் நாறிப்போன ஒரு பேர்வழியாக மரணத்தை அணைத்துக்கொண்டார். இன்னுமோர் பிரபல தலைவரான எட்மண்ட் சமரக்கொடி, மரணமான போது 1987 — 89 அரச பயங்கரவாதம், ஜே. வி. பி. யின் பாசிச தாக்குதல்களின் எதிரில் பயந்தாங்கொள்ளியாக இருப்பதை விட வேறு எதுவும் செய்ய முடியாது என ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருந்தார். அக்கட்சியின் மற்றுமோர் தலைவரான மெரில் பெர்னாந்து, 1953 ஹர்த்தால் போராட்டத்தில் தமது கீர்த்திக்கு மத்தியிலும், இன்று அரசியலில் இருந்து துறவறம் பூண்டுள்ளார். ல.ச.ச. க. (பு)யின் பெரிதும் வாயடிப்பு பேர்வழியான துல்சிரி அந்திராதியின் இன்றைய வாழ்க்கை என்ன? அவர் தொழிலாளர்களிடம் பணம் திரட்டி, மூன்றாம் தரமான ஒதுக்கப்பட்ட நாவல்களை மொழி பெயர்பபதன் மூலம் வயிறு வளர்த்து வருகின்றார். இந்த பப்லோவாதக் கும்பலின பெரும் பிரபல்யம் வாய்ந்த தலைவரான பாலா தம்பு, சி. ஐ. ஏ. இயக்கத்துடன் தொடர்பு வைப்பதன் மூலம் சலுகைகளைப் பெற்றுக் கொண்டவராக அவர் சார்ந்திருந்த பப்லோ — மண்டேல் அனைத்துலக ஆணைக் குழுவின மூலம் தீர்ப்பளிக்கப்பட்டது. இன்னும் எத்தனை பேர் இந்த அமைப்பினால் பிற்போக்கின் கைத்தேங்காயாக மாற்றப்பட்டனர்?

இதன் அர்த்தம், இவர்கள் இறந்ததும் இறக்கப் போவதும் பிற்போக்குக்கு ஒவ்வொரு இடங்களில சேவை செய்தபடியே. இவர்களின் பிணங்களுக்குத் தோள் கொடுக்க முன்வந்திருப்பவர்கள் நவசமசமாஜக் கட்சியைப் போன்ற வயிற்றுபாரி அமைப்புக்கள் மட்டுமே. நவசமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தமது 'வளவ்வ'வில் இருந்து இறங்கி, சமரக்கொடியின் பிணத்துக்கு கொழும்பு கனத்தையில் உரிமை கொண்டாடி 'போராடும்' போது, நவசமசமாஜக் கட்சி பிற்போக்குச் சந்தர்ப்பவாத அரசியலுக்குத் தோள் கொடுப்பதில் எவ்வளவு அக்கறை என்பதைக் காட்டிக் கொண்டது. எனவேதான் ஏகாதிபத்தியக் கைக்கூலியான பப்லோவாத பேராசிரியர் ஏர்ணஸ்ட் மண்டேல் இப்போது அக்கட்சிக்குத் தமது ஆசீர்வாதங்களை வழங்கியுள்ளார்.

1968ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஸ்தாபிக்கப்பட்ட போது அதை ஏளனம் செய்தவர்களுள் பலரின் பிற்கால வரலாறு அத்தகையது. இது இத்துடன் நின்றுவிடவில்லை. பிரமாண்டமான ஆட்சியாளர்களின் ஆதரவும், பரந்த திறைசேரியும், கோடிக்கணக்கான அங்கத்தவர்களையும் கொண்டுள்ளதாகப் பிரஸ்தாபித்துக் கொண்ட முன்னைய சோவியத் யூனியனதும் கிழக்கு ஐரோப்பாவினதும் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இன்று அழிந்தொழிந்து போய்விட்டன. இலங்கையிலும், அவ்வாறே இன்னும் பல நாடுகளிலும் பெரும் தொழிற் சங்கங்களையும், பெரும் புத்தகசாலைகளையும், தினசரிப் பத்திரிகைகளையும் கொண்டிருந்த ஸ்டாலினிஸ்டுகளின் இச் சகல மேதாவிலாசங்களும் சிதறிப் போய்விட்டன. சமூக ஜனநாயகக் கட்சிகளின் தலைவிதி — இவற்றின் தாயகமாகக் கருதப்பட்ட பிரித்தானியா, ஜேர்மனி போன்ற நாடுகளில் கூட இவற்றுக்கு ஒன்றும் குறையாத முறையில் சோகமயமானவையாக விளங்குகின்றன.

''இங்கு சொல்லப்பட்ட சகல அமைப்புக்களும் எதிர்காலத்துக்கான வாக்குறுதி அன்றி, கடந்த காலத்தில் நாற்றம் கண்டுபோன அழிபாடுகள். யுத்தமும், புரட்சியும் இவற்றைத் தரைமட்டமாக்கும்'' என லியோன் ட்ரொட்ஸ்கி 1938ல் குறிப்பிட்டார். அரை-நூற்றாண்டு கழிந்து போகையில் அது எவ்வளவு சக்திவாய்ந்த முறையில் நிரூபணமாகியுள்ளது என்பது அனைவருக்கும் தெளிவாகின்றது.

### புரட்சிக் கம்யூனிஸ்ட்

1966ன் சடைப்பகுதியில்
கொள்ளக் கூடிய எண்ணிக்கை
காம் அகிலத்தின் அனைத்து
ஒன்று கூடினர். 1964ல் சமசம
திரக் கட்சியுடன் கூட்டரசாங்
இழைத்த காட்டிக் கொடுப்பு
மான தலையீடு நடாத்த அ
கிய கிளையான பிரித்தானிய
தீர்மானத்துக்கு இணங்கச் ச
பேசும் எதிர்பார்ப்புடன் இல
முன்னேற்றமான தொழிலா
டையே பெரும் தாக்கத்தினை
யே சோசலிச லேபர் லீக்கின்
மைக்கேல் பண்டா ஒரு தெ
டன் இந்நாட்டில் சுற்றுப் ப
த்துலகக் குழுவினதும் அதன்
அரசியல் விதிமுறைகள் பற்
கை மூலம் அறிந்து கொ
குழுவினர், 1966ல் ரொன
டப்பட்டனர்.

இக் குழுவில் சேர்ந்து செ
குழு உறுப்பினரான தோழர்.
அனைத்துலகக் குழுவின் அர
கையை இளைஞர்கள் முன்
யாற்றியதை நாம் நன்றியுட
டும். சிறப்பாக 1953ல் பப்
ம்பித்த போராட்டம், நான்
னையும் கட்டியெழுப்புவதன
ஒரு போராட்டமாகும் என்
ஸ்டாலினிஸ்டுகளும், சமூக
கொண்டிருந்த யுத்தத்தின
பினுள் நிறுத்தி, விளக்கித்
அற்ப சொற்பம் அன்று. யு
பத்திய அரசியல், பொரு
வாத ரீதியில் இணங்கிப்
க்கு கொண்டு சென்று, அ
ளர் கட்சி, பப்லோவாதிகு
வதை எதிர்த்து 1961—63
குழு நடாத்திய போராட்
தொழிலாளி வர்க்க அனை
பாட்டு சாரத்தினை இளை
ஸ்பைக் ஓயவு ஒழிச்சல் இ
பேரில் அவர் எழுதிய கட்டு
தும் ஊக்கமளிப்பனவாய்

அந்த அரசியல் அத்தி
கம்யூனிஸ்ட் கழகம் நிறு
மீண்டும் பப்லோவாத சம
செல்லவும் அல்லது குட்டி
னுள் சிறைப்படுத்தி வைக்
களை உடைத்துக்கொண்டு
துக்கு உறுதியாகப் போரா
வாரத்தின் உறுதியான ம
கொள்கைப் பற்றான அடி
கொண்டிருக்கையில் பு.க.க
படைக் கொள்கைகளையு
ளையும் வலியுறுத்திய லெ
திரண்டது.

போல்ஷிவிசத்தின் அத்
செலுத்துகையில் லெனின்

''உபாயத்தின் அடியி
கைகள் பற்றி முடிவெடுப்
குகள் சொல்கிறார்கள். அ
குப் பின்னால் இழுபட்டு
மை முடிவு எடுக்க வேண்
றார்கள். உபாயத்தின்
கொள்கை பற்றிய பிரச்சி
விடத் தெரிவிக்கப்பட்டுள்
வெளிப்பாடாகும் என நா

அனைத்துலகவாதத்
அடிப்படைக் கொள்கையு
மூலோபாயமும் புரட்சிக்
ணியாக நிறுவப்பட்ட
கப்படும் மக்களிடையே அ
ட்டுச் சந்தேகம் கொண்ட
இருக்கவில்லை. நான்கா
குழுவின் இலங்கைக் கிளை
பின்னர் எம்மைவிட்டுப்
எண்ணக்கூடியவர்களாக
அதுவே.

அது அவர்களின் தல
னத்தைக் காட்டுவதாக

படிப்பகம்

www.padippakam.com



# யத்துக்குமான 25 ஆண்டுக்கால உறுதியான போராட்டம்

## கத்தின் ஆரம்பம்

பிரல்களில் எணக்கிட டுக்
ன இளைஞர்கள் நான்
குழுவுக்கு ஆதரவளித்து
கட்சி, சிறீலங்கா சுதந்
ல் சேர்ந்ததன் மூலம்
எதிராகத் திட்டவட்ட
த்துலகக் குழுவின் முக்
லிச லேபர் லீக் எடுத்த
ஜக் கட்சி மகாநாட்டில்
வந்திருந்த ஜெரி ஹீலீ,
இளைஞர் பகுதியினரி
படுத்தினார். 1964 ல
னுமோர் தலைவரான
பகிரங்க விரிவுரைகளு
செய்திருந்தார். அனை
தானியக் கிளையினதும்
யூஸ் லெட்டர்' பத்திரி
ருந்த ஒரு இளைஞர்
டாவினால் அணிதிரட்

ல.ச.ச.க(பு) மத்திய
ரெட் பெரேரா (ஸ்பைக்)
போராட்டத்தின் பதா
க்க அளப்பரிய சேவை
னைவு கூர்ந்தாக வேண்
தத்துக்கு எதிராக ஆர
அகிலத்தினைக் காப்பத
உள்ளடக்கிக் கொண்ட
ஏகாதிபத்தியவாதிகளும்
யகவாதிகளும் செய்து
ய சமரசத்தின் அமைப்
அவர் எடுத்த முயற்சி
ன் பின்னைய ஏகாதி
அமைப்புக்குச் சந்தர்ப்ப
த இன்னும் உச்சத்து
சோசலிசத் தொழிலா
மீண்டும் ஐக்கியப்படு
குதியில் அனைத்துலகக்
சூல் கொண்டிருந்த
வாத அரசியல் கோட்
க்கு இனங்காட்டுவதற்கு
போராடினார், அதன்
நம் பத்திரங்களும் பெரி
ன.

லேயே 1968ல் புரட்சிக்
டது. இளைஞர்களை
குகைக்குள் இழுத்துச்
ளித்துவ முட்டுச்சந்தி
எடுக்கப்பட்ட முயற்சி
சிக் கம்யூனிஸ்ட் கழகத்
ந்ததற்கு இந்த அத்தி
காரணம். அத்தகைய
யில் உறுதியாக நின்று
போதும் அரசியல் அடிப்
ட்சிகர மூலோபாயங்க
ரொட்ஸ்கியுடன் அணி

தினைப் பற்றிக் கவனம்
நமாறு குறிப்பிட்டார்:

அடிப்படைக் கொள்
பல்ல என மென்ஷிவிக்
பதிலாக நிகழ்வுகளுக்
று, நிலைமைக்கு நிலை
ன அவர்கள் சொல்கி
உள்ள அடிப்படைக்
ள... வெளியே தன்னி
ம், சந்தர்ப்பவாதத்தின்
துகின்றேன்.''

ளி வர்க்கப் புரட்சிகர
சோசலிசப் புரட்சியின்
ட் கழகத்தின் அச்சா
தொழிலாளர்—ஒடுக்
ள ஈர்ப்புச் சக்தியை
எம்மிடையே இல்லாது
த்தின் அனைத்துலகக்
க,க. நிறுவப்பட்டதன்
சன்றோர். விரல்விட்டு
போனதற்குக் காரணம்

நெஞ்சாத்தின் பலவீ
அன்று தொழிலாளி

வர்க்கத்தின் சுயாதீன புரட்சிப் பணிக்கு எதிராக ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்த சமூக சக்திகளின் ஆளுமையைக் காட்டிற்று. உலக ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்புக்காக அர்ப்பணம் செய்த ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகவாதத்துடன் இணைந்து – சிறப்பாக பின்தங்கிய நாடுகளில் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ சமூகத் தட்டினரும், அதன் நானாவித வேஷம் தாங்கிய அரசியல் இயக்கங்களும்—சில வேளைகளில் சோசலிசப் போர்வையில் கூட—அரசியல் கிளர்ச்சியின் உச்சியில் ஏறிக்கொண்டிருந்த காலம் அதுவாகும். அமெரிக்கப் பொருளாதாரத்தின் பலத்தின் அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்பட்ட உலகச் செழுமை, இவை அனைத்துக்கும் பின்னணியாக விளங்கியது. இந்தத் தற்காலிக நிலைமைக்கு அடிபணிந்து தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தினை நிராகரித்தவர்களும், அதனால் நான்காம் அகிலத்தினால் மட்டும் தோள் கொடுக்க வேண்டியதுமான தொழிலாளி வர்க்கத் தலைமை நெருக்கடியைத் தீர்க்கும் பொறுப்பினை கைகழுவி விட்டவர்களுமான பப்லோவாதிகள் அன்றும் கூட ஒரு அரசியல் சக்தியாக விளங்கியது. பேராசிரியர் ஏர்ணஸ்ட் மண்டேல் நிஜ ட்ரொட்ஸ்கிசத் தலைவராக உலகை வலம் வர முடிந்தது. அத்தோடு நடுத்தர வயதான ஒக்ஸ்போர்ட் மாணவர் தலைவர் தாரீக் அலி நான்காம் அகிலத்தின் பிரதிநிதியாக உலாவினார். இவர்களின் அரசியல் போர்வையைப் பெற்ற காஸ்ட்ரோ, சேகுவேரா பற்றிய வீரப்பிரதாபங்களை அளப்பது சிறப்பாக இளைஞர்களிடையே ஒரு பாணியாக மாறியது. முதலாளித்துவ ஊதுகுழல்கள் இந்த வேஷதாரிகளை நானாவிதமான முறையில் தூக்கிப்பிடிப்பது உலகம் பூராவும் இடம்பெற்றது. 'நிஜ வெகுஜன இயக்கம்' என அன்று கணிக்கப்பட்டது இந்த இயக்கமே. இது நான்காம் அகிலத்தின் உலகப் புரட்சிகரப் பணியை கீழ்ப்படுத்தியபடி தலைநீட்டிய பலம் வாய்ந்த எதிரி வர்க்க அழுத்தங்களை கட்டவிழ்க்கத் துணைபோயிற்று, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும், அனைத்துலகக் குழுவினதும் போராட்டம் பற்றிய ஐயப்பாடுகள் உருவாக இவையே வழிவகுத்தன. ஆதலால் 1970பதுகளின் முற்பகுதியில் யுத்தத்தின் பின்னைய உலக அரசியல், பொருளாதார அமைப்பினைச் சிதறவைக்கும் முதலாவது வெடிகுண்டு தீர்க்கப்பட்டபோது சிலர் எமது இயக்கத்தின் புரட்சிகர நம்பகத் தன்மையையிட்டு ஐயப்பாடு கொண்டு, எம்மை விட்டு நீங்கினர்.

அவர்களது யாத்திரை வெற்றியளிக்க பிரார்த்தித்த அதே வேளையில் நாம் எமது போராட்டப் பாதையை ட்ரொட்ஸ்கியின் முன்நோக்கில் அசையாத நம்பிக்கை வைப்பதன் மூலம் மேலும் மேலும் முன்னேற்றம் அடையச் செய்தோம்.

நான்காம் அகிலத்தின் ஆரம்ப வேலைத்திட்டமான இடைமருவு வேலைத் திட்டத்தின் இறுதிப் பாகத்தில் ட்ரொட்ஸ்கி பின்வருமாறு குறிப்பிட்டார்:

''சந்தேகப் பிராணிகள் கேட்கிறார்கள்:... ஒரு அகிலத்தினை 'செயற்கை'யாக சிருஷ்டித்து விடமுடியாது. அது மாபெரும் நிகழ்வுகளில் இருந்து மட்டுமே தோன்ற முடியும் என்றெல்லாம் செல்கின்றார்கள். இந்தச் சகல எதிர்ப்புக்களும், சந்தேகப் பிராணிகள் ஒரு புதிய அகிலத்தினை நிறுவ உதவமாட்டார்கள் எனபதை மட்டுமே காட்டுகின்றது. அவர்கள் எதற்கும் உதவாக்கரையானவர்கள்.



பு.க.க. வின் 25 ஆண்டுக்கால போராட்ட மரபுரிமையைச் சித்தரிக்கும் கண்காட்சியை ரசிப்போர்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25 வது ஆண்டு நிறைவு விழா

''...நான்காம் அகிலம் இருந்து வருகின்றது; போராடுகின்றது. இது பலவீனமானதா? ஆம். இதன் அங்கத்தவர்கள் எண்ணற்றவர்கள் அல்ல. ஏனெனில் இது இன்னமும் இளமையாய் உள்ளது. அவர்கள் முக்கியமாக இன்னமும் காரியாளர்கள். ஆனால் இந்தக் காரியாளர்கள் எதிர்காலத்துக்கு வாக்குறுதி அளித்துள்ளார்கள், இந்தக் காரியாளர்களுக்கு வெளியே இந்தப் பூகோளத்தில் புரட்சிகர என்ற பெயருக்குப் பொருத்தமான எந்தவொரு நீரோட்டமும், இல்லை. எமது அகிலம் இன்னமும் எண்ணிக்கையில் பலவீனமாய் இருந்தாலும், சித்தாந்தத்திலும், வேலைத் திட்டத்திலும் பாரம்பரியத்திலும் அதன் காரியாளர்களின் இணையற்ற மனோபாவத்திலும், பலம் வாய்ந்தது. இன்று இதனைக் கண்டுகொள்ளாத எவரும் தற்போதைக்குப் புறத்தே நிற்கட்டும். நாளை இது மேலும் தெளிவாகும்.''

## கீர்த்தி பாலசூரிய

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளையைக் கட்டி எழுப்ப முடிபு செய்த முன்னணித் தோழர்களுள் உலகக் கட்சியின் அடிப்படைக் கொள்கை, மூலோபாயத்துக்கான போராட்டத்தில் உறுதியாக முன்னணியில் நின்றவர் தோழர். கீர்த்தி பாலசூரியவே. அவர் எம் அனைவருள்ளும் வயதில் இளைய அங்கத்தவராக விளங்கினார், பதினேழு வயதில்—பாடசாலை செல்லும் கட்டத்திலேயே அவர் அரசியலுக்குள் பிரவேசித்த போது ட்ரொட்ஸ்கிசத்தினால் ஆகர்ஷிக்கப்பட்டவராய் விளங்கினார். ட்ரொட்ஸ்கி ஒரு தடவை ''இயக்கத்துக்கு உயிரூட்டுவது கடந்த கால காட்டிக் கொடுப்புப் பற்றிய பொறுப்பில் இருந்து விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களால்' என்று குறிப்பிட்டார். தோழர், கீர்த்தி அதனை ருசுப்படுத்தினார்.

1966ல் இருந்து அனைத்துலகக் குழுவின் நீண்டகால போராட்டத்தின் படிப்பினைகளை ஆழமாக ஆய்வு செய்து, பேச்சு, செயல் அனைத்தையும் நான்காம் அகிலத்தின் மாற்றுப் புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்புவதற்கு அர்ப்பணம் செய்தார். அவரின் கொள்கை சார்ந்த உறுதியான போராட்டத்தின் மூலம் அவர் 1968 ஜூனில் நடைபெற்ற புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் — ஆரம்ப மகாநாட்டிலேயே அதன் பொதுச் செயலாளர் பதவிக்கு ஏகமனதாக நியமனம் செய்யப்பட்டார். அக்காலத்தில் பு.க.க. வின் ஓரே முழுநேர அமைப்பாளராக விளங்கியவர் அவரே.

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமை நெருக்கடியை அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் உலகத் தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்டப் போராடும் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டியெழுப்பும் போராட்டத்தின ஒரு பாகமாகமட்டுமே தீர்க்க முடியும் என தோழர். கீர்த்தி உறுதியாக நம்பினார். ஆதலால் அவர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினர்களை அணிதிரட்ட மட்டுமன்றி, தாம் உட்பட அவர்களை உலகப் புரட்சிகர இயக்கத்தின் போராளிகளாகப் பயிற்சியளிக்க முன்னணியில் நின்றார். இதனால் அனைத்துலகக் குழுவினுள் தோன்றிய அரசியல் பிரச்சினைகள் அவரின் நெருக்கமான பார்வைக்கு உள்ளாயின.

முழு உலக இயக்கத்தினையும் நான்காம் அகிலத்தின் பொறுப்பிலும், வேலைத்திட்டத்தினதும் அடிப்படையில் உறுதியாக நிலைநாட்டும் பொருட்டு செய்யப்பட்ட பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த பல அரசியல் தலையீடுகளுக்கு அவர் பு க,க. தலைவர் என்ற கோதாவில் ஆஜரானார். சிறப்பாக அன்று பிரித்தானிய சோசலிச லேபர் லீக்கின் தலைவரான மைக்கேல் பண்டா, மாஓ சே துங் அதிகாரத்துவத்தின் கலாச்சாரப் புரட்சியைத் தூக்கிப் பிடிக்கவும், வியட்னாம் விடுதலை இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்தினை விமர்ஷனமின்றிப் புகழ்ந்து பாடவும முன்வந்ததைக் கண்டதுதான் தாமதம், அது நான்காம் அகிலத்தின் உலகப் புரட்சிப் பணியினின்றும் விலகிச் செல்லும் முயற்சி

www.padippakam.com



# மத்திய வங்கி ஊழியர் சங்கத் தேர்தல் படிப்பினைகள்

விஜே டயஸ்

கடந்த ஜூன் 24ம் திகதி நடைபெற்ற இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கத் தேர்தலில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்கள் முக்கிய பதவிகளுக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டமை வர்க்க உறவுகளிலான ஒரு முக்கிய மாற்றத்தினைக் குறித்து நிற்கின்றது.

சிறப்பாக புகக மத்திய குழு உறுப்பினர் தோழர். எச்.எம் பி.ஹேரத் ம.வ.ஊ.ச. பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டமை சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது புகக மத்திய குழு உறுப்பினரான ஹேரத், உலக சோசலிசத்துக்கான வேலைத்திட்டத்துக்கும் நான்காம் அகிலத்தின் பதாகையின் கீழ் தொழிலாள வர்க்கத்தினை அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுத்தவும் போராடுபவராக ம வ.ஊ ச. அங்கத்தினர்களிடையே மட்டுமன்றி, பொதுவில் தொழிலாள வர்க்கத்திடையே பிரசித்தி பெற்றவர்.

இத்தேர்தலில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இன்னும் மூன்று பதவிகளையும் வெற்றி கொண்டுள்ளது. அவை இணைச் செயலாளர், உதவிப் பொருளாளர், செயற்குழு உறுப்பினர் என்பனவாகும். இணைச் செயலாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர். எச். பலங்கசிங்க 1025 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார். மற்றுமோர் புகக மத்திய குழு அங்கத்தவரான ரீ. என் நிஹிஷான் 197 வாக்குகளைப் பெற்றார். இவர் 1985ல் நிர்வாகத்தினால் பழிவாங்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டதோடு, மத்திய வங்கியினுள் பிரவேசிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டவர்.முன்னைய ந சமசமாஜ தலைமை இவர் மீண்டும் சேவையில் சேர்க்கப்படுவதற்கு ஆதரவாக இடம்பெற்ற அரசியல், சட்ட போராட்டங்களைச் சீர்குலைக்க செயற்பட்டது.

ஜெரானி ரத்னாயக்க 371 வாக்குக்களுடன் செயற்குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். புகக நீண்டகால அங்கத்தவரான இவர் 15 ஆண்டுகளுக்கு மேலாக தொழிற்சங்கத் தேர்தல்களில் போட்டியிட்டு வந்துள்ளார்.

ஒரு புறத்தில் நவசமசமாஜக் கட்சி தலைவரும் மறுபுறத்தில் தொழிற்சங்க போராளிகள் எனச் சொல்லிக் கொண்டவர்களுடனும் இடம் பெற்ற இம் மும்முனைப் போட்டியில் ஹேரத் 367 வாக்குகளை வென்றார். நவசமசமாஜக் கட்சி வேட்பாளர் 226 வாக்குகளுடன் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டார். இந்தத் தொழிற்சங்க 'போராளிகள்' குழு 356 வாக்குகளைப் பெற்று ம. வ. ஊ. ச. தலைவர் பதவியை வெற்றி கொண்டது.

## பு. க. க.வுக்கு எதிரான நவசமசமாஜ கூட்டு

ஏர்னஸ்ட் மண்டேலின் போலி அகிலத்தின் இலங்கைப் பகுதியாக இன்று தொழிற்படும் ந.ச.ச.க. கடந்த மூன்று ஆண்டுகளாக முதலாளித்துவ சி.ல,சு.க. வையும் மற்றும் வலதுசாரிச் சக்திகளையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு எதிராக அணிதிரட்டுவதன் மூலம் இந்தத் தலைமைப் பதவியைப் பிடித்துக் கொண்டிருந்தது. நவசமசமாஜக் கட்சியினர் மத்திய வங்கி நிர்வாகத்தின் முழு ஆதரவைப் பெற்றுவந்துள்ளனர். நிர்வாகம் புகக தோழர்களைத் தமக்கு ஒரு பேராபத்தாக கருதி வந்துள்ளது.

1987–89ல் அரச பயங்கரவாதமும், ஜேவிபி பாசிச தாக்குதல்களும் இடம்பெற்ற வேளையில் ஹேரத்தும் ம,வ. ஊழியர் சங்கத்தின் ஏனைய புகக அங்கத்தவர்களும் தொழிலாளி வர்க்கத்தினை அணிதிரட்டும் போராட்டத்தில ஈடுபட்டிருந்தனர். சகல தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் தொழிலாளர்களைக் கைகழுவி விட்டுவிட்டு முதலாளித்துவ அரசிடம் இருந்து பாதுகாப்புத் தேடிவர்த வேளையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே தொழிலாளி வர்க்கத்தினைப் பேணிக்காக்க ஒரு சுயாதீனமான அனைத்துலகப் போராட்டத்தினைத் தொடுத்தது.

ஹேரத் இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு விஜயம் செய்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்களிடையே பேசினார். இது பாசிச தாக்குதலுக்கு எதிராக தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஐக்கிய முன்னணிக்கான பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக இடம் பெற்றது, இதைத் தொடர்ந்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினாலும் மத்திய வங்கி ஊழியர் சங்கத்தினாலும் கூட்டாக ஒழுங்கு செய்யப்பட்ட வெற்றிகரமான பேராளர் மாநாடு நடைபெற்றது. இது தொழிலாளர்களதும், இளைஞர்களதும் பரந்த ஆதரவினை வெற்றி கொண்ட அதே வேளையில் ஆளும் வர்க்கத்தினதும் குறிப்பாக மத்திய வங்கி நிர்வாகத்தினதும் குரோதத்தினைச் சம்பாதித்துக் கொண்டது.

1989 ம.வ ஊ.ச. தேர்தலில் நிர்வாகத்தினால் தூண்டிவிடப்பட்ட வலதுசாரி சக்திகள், நவசமசமாஜக் கட்சி வேட்பாளர்களுக்குப் போதுமான அளவு வாக்குகளை வழங்கியதன் மூலம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினர் தலைமைப் பதவியைக் கைப்பற்றா வண்ணம் தோற்கடித்தனர்.

உலக அரசியல் நிலைமையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்கள்- யுத்தத்தின்பின்னைய உலக ஒழுங்கமைப்பின் வீழ்ச்சி, கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியும், அதைத் தொடர்ந்து தொழிலாள வர்க்கத்தினுள் உருவான குழப்ப நிலைமையையும் பயனபடுத்திய ந.ச.ச.க. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும்நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத புரட்சிகர வேலைத் திட்டத்துக்கு எதிராகப் பின்தங்கிய பகுதியினரை ஏவிவிட்டது.

தொழிற்சங்கத் தலைமைப் பதவியை வென்றதுதான் தாமதம் ந.ச.ச.க, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களுக்கு எதிராக மத்திய வங்கி நிர்வாகத்துடன் சேர்ந்து ஒரு சதியில் இறங்கியது. 1990 ஜூலை 15ம் திகதி ந.ச.ச.க, அரசியல் கமிட்டி அங்கத்தவர்களான சுனில் ரத்னபிரிய, சரணபால (இவர்கள் மத்திய வங்கி ஊழியர்கள் அல்ல) இருவரும் மத்திய வங்கி ஆளுனரின் அலுவலகத்துக்குச் சென்று ஆளுனரைச் சந்தித்து இது சம்பந்தமாகக் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். இதைத் தொடர்ந்து புகக அங்கத்தவர்களுக்கு எதிரான வேட்டை உச்சக் கட்டத்தை அடைந்ததோடு ஹேரத் கொழும்பில் இருந்து 130 மைல்களுக்கு அப்பால் உள்ள அநுராதபுரத்துக்கும் மாவிக்கும்புர 100 மைல்களுக்கு அப்பால் உள்ள மாத்தறைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர் இவர்கள் தமது சகோதர அங்கத்தினர்களை சந்திக்க மத்திய வங்கி தலைமையலுவலகத்துக்கு வருவதைத் தடை செய்யும் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## ஒப்புதல் சத்தியக் கடதாசி.

இந்த வேட்டைக்கு எதிராகப் புகக தாக்கல் செய்த வழக்கின் பேரில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு சத்தியக் கடதாசியில் இந்த இடமாற்றங்கள் நவசமசமாஜ கட்சி தொழிற்சங்கத் தலைமையைக் காக்கவே செய்யப்பட்டது என்பதை வங்கி அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்;

இத்தகைய காட்டிக் கொடுப்புக்களாலும் 'கோபரேட் வாத' தாக்குதல்களாலும் நவசமசமாஜ தலைவர்கள் மத்திய வங்கியில் மட்டுமன்றி ஏனைய வேலைத்தலங்களிலும்செல்வாக்கிழந்துள்ளனர். அரசியல் குழப்ப நிலைமை காரணமாக ந.ச.ச.க. சூழ அணிதிரண்ட தொழிலாளர்கள் அவர்களை விட்டுப் பிரிந்து செல்வதையும், ஆளும் வர்க்கத்தினால் திரட்டப்பட்ட வலதுசாரி சக்திகள் மட்டும் எஞ்சியிருப்பதையும் மத்திய வங்கி ஊழியர் சங்கத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

கடந்த ஆண்டு. ந ச,ச.க. அங்கத்தவர் கருணாரத்ன, 342 வாக்குகளைப் பெற்ற ஹேரத்துக்கு எதிராக 550 வாக்குகளைப் பெற்றுப் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இவ்வாண்டு இந்த 550 வாக்குகள் நவசமசமாஜக் கட்சிக்கும் சின்டிக்கல் போராளிகளுக்கும் இடையே பிளவுண்டு போயிற்று. இதனால் ந.ச.ச.க. பின் முக்கிய தேர்தல் அடிப்படையாக முதலாளித்துவ சி.ல.சு.க, யூஎன்பி போன்ற அப்பட்டமான வலதுசாரி சக்திகள் விளங்கியது.

மாகாண சபைத் தேர்தல்களை ஆய்வு செய்து மண்டேலின் 'இன்டர்நஷனல் வியூ பொயின்ட்'டில் ஜூன் வெளியீட்டில் பிரசுரமான கட்டுரையில் ந.ச.ச.ச. பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன கூறியதாவது: "எவ்வாறெனினும் அந்த போராளி தொழிலாளர்கள் எம்மைக் கைவிட்டுச் சென்று விட்டனர் என்பதை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்." அவருக்கு நன்கு புரிந்த காரணங்களுக்காகவே ந.ச.ச.க. க்கு இப்போது ஆதரவளிக்கும் சக்திகள் எவை என்பதைக் கூற அவர் அஞ்சுகின்றார்.

மத்திய வங்கி ஊழியர் சங்கத் தேர்தல், தொழிலாளர்களின் போக்கில் ஏற்பட்டுள்ள ஒரு முக்கியமான மாற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. இது புகக அரசியல் வேலைத்திட்டப் பிரேரணை, பொது அங்கத்தவர் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியதன் மூலமும் வெளிப்பாடாகின்றது இக்கூட்டத்தில் ந.ச.ச.க. பிரேரணை மூன்றே மூன்று வாக்குகளையே பெற்றது. தலைமைப் பதவிக்கான இரகசிய வாக்களிப்பில் ந.ச,ச.க, க்கு ஆதரவளித்த சி.ல.சு.க., யூஎன்பி வலதுசாரிகள் ந.ச.ச.க. வுக்கு அப்பட்டமாக ஆதரவு காட்டி வாக்களிக்கத் தயாராக இருக்கவில்லை இதனால் அவர்கள் மறு நாள் நடைபெற்ற அங்கத்தவர் கூட்டத்திற்கு வருகை தரவில்லை. தொழிற்சங்கப் போராளிகள் குழுவினர். கூட்டத்தில் முன்வைக்க பிரேரணையைக் கொண்டிருக்கவில்லை இதன்மூலம் தமது அரசியல் வங்குரோத்தினைக் காட்டிக் கொண்டனர்.

ஜனாதிபதி பிரேமதாசவின் மரணத்தினைத் தொடர்ந்து புதிய யூஎன்பி ஆட்சியாளர்கள், ஏகாதிபத்திய வங்கியாளர்களின் சகல கோரிக்கைகளையும் அமுல்படுத்தும் விதத்தில் அரச இயந்திரத்தினைப் பலப்படுத்தி வருகின்றது. முதலாளித்துவ சொத்துடமை உறவுகளின் அடிப்படையில் தொழிற்பட அணிதிரட்டப்பட்ட தொழிற்சங்கங்கள், இன்று நிதி மூலதனத்தினால் உலகளாவிய மட்டத்தில் தொடுக்கப்படும் தாக்குதல்களை எதிர்கொள்ள இலாயக்கற்றவையாக உள்ளன. புரட்சிக் கட்சி, தொழிற்சங்கங்களையும், அவற்றின் போராட்டங்களையும் நிராகரிக்கவில்லை, ஆனால் தொழிற்சங்க வாதத்திற்கு மறுவாழ்வு அளிப்பதன் மூலம் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் மீட்சி பெறச் செய்யலாம் என நினைப்பது ஒரு உயிராபத்தான தவறாகும். இன்று அவசியப்படுவது தேசியவாதத்தினதும், துறைசார் தொழிற்சங்கத்தினதும் எல்லைகளைத் தாண்டி, தொழிலாளி வர்க்கத்தினை புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதே. இது ஒரு புரட்சிக் கட்சியின் பணியாகும்.

மத்திய வங்கி ஊழியர் சங்க பொதுக் கூட்டத்தில் ந,ச.ச.க. சந்தர்ப்பவாதிகளுக்கும் தொழிற்சங்கவாதிகள் எனப் படுவோருக்கும் எதிராகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினரால் முன்வைக்கப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட அரசியல் பிரேரணை கூறுவதாவது:

"தொழிலாளி வர்க்கத்துக்கு ஒரே ஒரு பாதையே உள்ளது.அது ஏகாதிபத்தியவாதிகளுக்கும் ஏகாதிபத்தியச்சார்பு

(13'ம் பக்கம் பார்க்க)



1988 — 90 அரச பயங்கரவாதம் — ஜேவிபி பாசிச தாக்குதல்களுக்கு எதிராக புகக மேற்கொண்ட அனைத்துலக பிரச்சார இயக்கத்தின் ஒரு பாகமாக தோழர். ஹேரத் (இடம்) அவுஸ்திரேலியத் தொழிலாளர்களுடன்

படிப்பகம்